**எங்கள் கல்லூரி நிறுவனர்-தலைவர் :**

இலங்கையில் (St. Alosius College) தூய அலோஸியஸ் கல்லூரியில் HSC படித்த நிறுவனர்-தலைவர் அவர்கள் ஆற்றிவரும் பணிகள் அனந்தம்.

**மார்க்கப் பணிகள் :**

காயல்பட்டணம் காதிரியா கொடிமர சிறு நெய்னார் பள்ளியின் (KKSNP) முன்னாள் நிர்வாகியாகவும் பின்னர் அதன் தலைவராகவும் பணிபுரிந்தார். தற்போது அப்பள்ளியின் உறுப்பினராகப் பணியாற்றுகிறார். காயல்பட்டிணம் ஆறாம்பள்ளி வாசலின் முன்னாள் முதவல்லி குற்றாலம் ஜும்ஆ பள்ளியின் நிர்வாகக்குழு உறுப்பினர் காயல்பட்டிணம் மஹ்லரா அரபிக் கல்லூரியின் ஆட்சிக்குழு உறுப்பினர் காயல்பட்டிணம் பெரிய, சிறிய ஜும்ஆப் பள்ளி வாசல்களின் ஆட்சிக்குழு உறுப்பினர் காயல்பட்டிணம் காட்டுமொகுதூம் பள்ளியின் நிர்வாகக்குழுத் தலைவர் மற்றும் சென்னை மஸ்ஜிதுல் மாமூரின் உறுப்பினராகவும் மார்க்கப் பணியாற்றி வருகிறார்.

**கல்விப் பணிகள் :**

பரந்து விரிந்த கல்விப்பணிகளில் சில. பாளையங்கோட்டை சதக்கத்துல்லா அப்பா கல்லூரியின் நிர்வாகக்குழு உறுப்பினர் சென்னை புதுக்கல்லூரி மற்றும் காயிதே மில்லத் கல்லூரியின் ஆயுட்கால உறுப்பினர் வாவு அறக்கட்டளை நிர்வகிக்கும் சுபைதா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சென்ட்ரல் மேல்நிலைப் பள்ளிகளின் தலைவராகவும் செயல்படுகிறார். வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியை 2006-2007ல் தொடங்கினார். இன்று அக்கல்லூரி ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவிகள் பயில ஏழு இளங்கலை வகுப்புகள், இரண்டு முதுகலைப் பட்டப்படிப்புகளுடன் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அக்கல்லூரியின் தலைவராக சீரிய பணியாற்றி வருகிறார்.

**சமுதாயப் பணிகள் :**

காயல்பட்டணம் நகராட்சியின் முன்னாள் தலைவர் பாளையங்கோட்டை முஸ்லிம் அனாதை நிலையம் நிர்வாகக் குழுவின் உறுப்பினர் தமிழ்நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி சென்னை மற்றும் மும்பை கிளைகளின் உறுப்பினர் காயல்பட்டிணம் ஜலாலியா கல்யாண மஜ்லிஸின் செயல்குழு உறுப்பினர் மற்றும் காயல்பட்டிணம் ஐக்கிய பேரவையின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் உள்ளார். மதுரையில் அமைந்துள்ள பயணிகள் தங்கிச்செல்ல வகைசெய்யும் காயல்பட்டணம் முத்துச்சாவடியின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் செயல்படுகிறார்.

**மருத்துவ சேவை :**

KMT என்று அழைக்கப்படும் காயல்பட்டண மருத்துவ அறக்கட்டளையில் முன்னாள் துணை பொருளாளராகவும் பின் பொருளாளராகவும் அதன் பின் துணைத் தலைவராகவும் செயல்பட்டுள்ளார். தற்போது அதன் ஆட்சிக் குழு உறுப்பினாராக உள்ளார். காயல்பட்டண அரசு மருத்துவமனையின் ஆலோசனைக் குழு தலைவராக உள்ளார்.

**விளையாட்டு :**

இலங்கையில் சிறந்த விளையாட்டு வீரர் (Sportsman) ஆகவும், கல்லூரி அளவில் பன்னாட்டு உதை பந்தாட்ட வீரராகவும் சிறந்து விளங்கினார். மேலும், காயல்பட்டிணத்தில் 1971ம் ஆண்டு (KSC) விளையாட்டு குழு அமைப்பு அமைவதற்கு முக்கிய பங்கு வகித்ததோடு அதன் தலைவராகவும் சிறப்பாக செயல்பட்டார்.

**முன்னர் ஆற்றிய பணிகள்:**

ஹாங்காங்கில் இந்திய வணிகக் கட்டமைப்பின் (Indian Chamber of Commerce) ஆட்சிக்குழு உறுப்பினர் அதன் நகை மற்றும் கல் வணிகத்துறை (Gem & Jewellery Department) தலைவர் ஹாங்காங்கில் - Kowloon Mosqueன் செயலாளராகவும், அப்பள்ளியை புதியதாக கட்டுவதற்கு முன்னோடியாகவும் இருந்துள்ளார் ஹாங்காங்கில் இஸ்லாமிய கூட்டமைப்பு (Islamic Union) உபதலைவர் ஹாங்காங்கில் பன்னாட்டு இஸ்லாமிய சங்கத்தின் (International Islamic Society) உபதலைவர் ஹாங்காங்கில் இந்திய முஸ்லிம் சங்கத்தின் (Indian Muslim Association) செயலர் ஹாங்காங்கில் இலங்கையின் (The Gramodaya Mandala Fund) கிரமோதய மண்டலயா நிதி குழுவின் கமிட்டி உறுப்பினராக அன்றைய மாண்புமிகு இலங்கைப் பிரதமர் R. பிரேமதாசா அவர்களால் 1983ல் நியமிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டார்.

**பெற்ற விருதுகள் :**

| தேதி | நிகழ்வு | விருது |
|---|---|---|
| 21.06.2008 | இந்திய ஜுனியன் முஸ்லீம் லீக் மணிவிழா மாநாடு, சென்னை. | சமுதாய ஒளி விளக்கு விருது. |
| ஜுலை 2011 | இஸ்லாமிய தமிழ் இலக்கிய 15வது மாநாடு, | சேவை செம்மல் விருது. |

| | | |
|---|---|---|
| | காயல்பட்டணம். | |
| அக்டோபர் 2011 | இஸ்லாமிய தமிழ் இலக்கிய 3ம் மாநாடு, தென்காசி. | வாழ்நாள் சாதனையாளர் விருது. |

இந்தியாவில் பிறந்து சிறுவயதிலேயே இலங்கை சென்றார். அங்கு கல்விபயின்ற பின் வணிகத்தில் ரியல் எஸ்டேட் அதிபராகவும் திகழ்ந்தார். தற்போது இவரது தொழில் பன்னாட்டளவில் பரந்து விரிந்து நடைபெற்று வருகிறது.